**கூடுதல்  சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**
**முன்னிலை – திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள், 20ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.No.8/2025 in O.S.No.34/2008**

1. கண்ணப்பிள்ளை (இறந்துவிட்டார்)
2. பாலம்மாள்,
3. சீனுவாசன்,
4. நரேஷ்பாபு, . . . மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள்

/எதிராக/

1. சாந்தி (எ) மீனாட்சி, . . . எதிர்மனுதாரர்/மனுதாரர்
2. ஆண்டாள்,
3. லலிதா,
4. மல்லிகா,
5. இணைசார்பதிவாளர்–2, அம்பத்துார்,
6. இணைசார்பதிவாளர்–2, திருவத்திபுரம்.

. . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 12.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் மனுதாரருக்கு எதிராக 06.12.2025 அன்று பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்த வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.20 14:40:31 +0530

**<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் இம்மனுவில் 2ம் மனுதாரர். மேற்படி மனுவில் 1ம் எதிர்மனுதாரர் வேறு வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்வதற்கு மேற்படி மனு தாக்கல் செய்து அதில் தங்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய 06.12.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றம், அன்றைய தினம் வழக்கறிஞரிடம் தங்கள் தரப்பு குறித்து தெரிவித்து எதிருரை தயார் செய்ய வழக்கறிஞர் கூறியிருந்தார் என்றும், ஆனால் திடீரென தனக்கு உடல்நிலை சரியில்லாமல் வழக்கறிஞரையும் சந்தித்து எதிருரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போனதால் தங்கள் தரப்பை நீதிமன்றம் ஒருதலைப்பட்சமாக வைத்து 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு விசாரணைக்காக 11.12.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாய்தா தினம் எதிருரை தாக்கல் செய்ய இயலாமல் போனது தெய்வாதீனமானது என்றும், மேலும் மன்னிக்கத்தக்கது என்றும், இத்துடன் எதிருரை தயார் செய்து தாக்கல் செய்யப்படுகிறது என்றும், மேற்படி அசல் மனுவில் தங்கள் தரப்பில் உள்ள நியாயங்களை நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டியது அவசியமாயும்,நியாயமாயும் உள்ளது என்றும், இத்துடன் தாக்கலாகும் எதிருரையை ஏற்று மனுதாரர் பேரில் 06.12.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து தங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துரைக்க உத்தரவிட வேண்டி மனுதாரர் பரம் மனுதாக்கல்.

**<u>3. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், அதனை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.20 14:40:45 +0530

என்றும், இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுதாரர் தாங்கள் எந்த மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதையும் எந்த மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்துள்ளோம் என்பதையும் சரிவர தெரிந்து கொள்ளாமல் இம்மன்றத்தை குழப்பும் விதமாக ஏற்கனவே ஆவணங்கள் தாக்கல் செய்ய கோரும் மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த மனுவில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பது போலவும், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது போலவும் தெளிவின்றி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் முதலில் தெளிவாக எந்த மனுவில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து அதனடிப்படையில் மனு தாக்்ல செய்யவேண்டும் என்றும், அதைவிடுத்து ஏற்கனவே எதிருரை தாக்கல் செய்த மனுவில் மீண்டும் எதிருரை தாக்கல் செய்யவேண்டுமென்று கூறியுள்ளது ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றே இவ்வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கில் உரிய நேரத்தில் எதிருரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு குழப்பமாக தெளிவின்றி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்று எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. I.A.7/2025 மனுவில் மனுதாரர் எதிருரை



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.20 14:40:51 +0530

தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக 06.12.2025 தேதியன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் இம்மனுவுடன் எதிருரையும் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்களுக்கு அன்றைய தினம் உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யமுடியாமல் போய்விட்டது என்று மனுவில் காரணம் கூறியுள்ளார். மனுதாரர் எந்த முகாந்தரமும் இல்லாமல் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பது எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டது. எனவே மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணத்தை ஏற்றும், மனுதாரர் I.A.No.7/2025 மனுவினை கட்சி செய்யும் பொருட்டும் மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், மனுதாரர்களின் மனுவை அனுமதித்து மனுதாரர்களுக்கு எதிராக 06.12.2025 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவானது ரத்து செய்யப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.20 14:41:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.20 14:41:07 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.